வருவாய் நிருவாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 5.

**கூடுதல் தலைமை செயலர்/வருவாய் நிருவாக ஆணையரின் செயல்முறைகள்**
முன்னிலை: திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப.,

செ.மு.ஆ.எண். ஆ.கு.3/7365/2016 நாள்.17.09.2021.

பொருள்: கருணை அடிப்படையில் பணி நியமனம் – வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறையில், கண்பாணிப்பாளராகப் பணியாற்றி, பணிடையே 23.11.2015 அன்று காலமான திரு.ப்பி.எஸ்.கோபிநாத் என்பவரின் மகன் திரு.ஜி.பிரானேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டது – பணி வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. இணை ஆணையர் (வ.நி) அவர்களின் செயல்முறை ஆணை எண். அ.ந.1(1)/751/2019, நாள்.23.01.2019 மற்றும் 26.01.2019.
2. இவ்வலுவலக அலுவல் சாரா குறிப்பு. அ.ந.1(1)/7519/2019, நாள்.30.09.2019.
3. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்.26.02.2021.
4. அரசுக் கடித எண்.9694/பணி9(2)/2021–3, நாள்.28.06.2021.

*******

**ஆணை:**

வருவாய் நிருவாக பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறையில் கண்பாணிப்பாளராகப் பணியாற்றி, பணிடையே 23.11.2015 அன்று காலமான திரு.ப்பி.எஸ்.கோபிநாத் என்பவரின் மகன் திரு.ஜி.பிரானேஷ் என்பவருக்கு பார்வை–1 இல் காணும் இணை ஆணையர் (வ.நி) அவர்களின் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு 24.01.2019 பிற்பகல் இவ்வாணையரகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

2) பார்வை–3 இல் காணும் அரசாணை மற்றும் பார்வை–4 இல் காணும் அரசுக் கடிதத்தில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்த வித விதித்தளர்வும் தேவைப்படாத பணியாளர்களுக்கு சம்பந்தப்பட்ட பணிநியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு தொடர்புடைய அரசுப்பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) எனவே, மேற்படி பார்வை–3 இல் காணும் அரசாணை மற்றும் பார்வை–4 இல் காணும் அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணைகளுக்கிணங்க, திரு.ஜி.பிரானேஷ் என்பவருக்கு இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 24.01.2019 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணி வரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

4) மேலும், தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள உதவி ஆணையர் – 3 க்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/–க.பணீந்திர ரெட்டி
கூடுதல் தலைமை செயலர்/
வருவாய் நிருவாக ஆணையர்

<u>பெறுநர்:</u>
திரு.ஜி.பிரானேஷ், (இளநிலை உதவியாளர்)
வருவாய் நிருவாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சென்னை–5.

<u>நகல்:</u>
1. உதவி ஆணையர் – 3
வருவாய் நிருவாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 5. (தக்க பதிவுகள் மேற்கொள்ள)
2. இருப்புக் கோப்பு.
3. அரசு முதன்மைச் செயலர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி–9)துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.

B. Kala 26/9/2024

உதவி ஆணையர் –4,
கூடுதல் தலைமைச் செயலர் /
வருவாய் நிருவாக ஆணையருக்காக.